SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA1 பரீட்சை - யூலை 2017

**(July 2017 Examination - AA1 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA13**

# வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் (EBA)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வன. முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA1 பரீட்சை – யூலை 2017

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறுநோக்க தேர்வு வினாக்கள்**

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

### வினா 1ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா இலக்கம் | விடைகள் |
|---|---|
| 1.1 | 2 |
| 1.2 | 3 |
| 1.3 | 4 |
| 1.4 | 2 |
| 1.5 | 2 |
| 1.6 | 2 |
| 1.7 | 4 |
| 1.8 | 1 |
| 1.9 | 4 |
| 1.10 | 4 |
| 1.11 | பிழை |
| 1.12 | பிழை |
| 1.13 | சரி |
| 1.14 | பிழை |
| 1.15 | சரி |
| 1.16 | பூச்சியமாக |
| 1.17 | நேர்க்கணியமாக |
| 1.18 | வர்த்தக வங்கிகள் |
| 1.19 | நிலைபேறான அபிவிருத்தி |
| 1.20 | தொழிலின்மை |

**(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள், மொத்தம் 40 புள்ளிகள்)**

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**(04 கட்டாய வினாக்கள்)**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

## வினா 2ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) பொருட்கள், சேவைகள் உற்பத்தி செய்வதற்கு வரையறுக்கப்படாத அளவில் பயன்படுத்தப்படும் எவையேனும் மற்றும் உற்பத்தி செயன்முறையின் சந்தர்ப்பச் செலவில் இணைக்கப்படாததுமானவை பொருளாதாரமற்ற வளங்கள் எனப்படும்.

உ+ம் மழைநீர், சூரியஒளி, இயற்கைக் காற்று

பொருளாதாரமற்ற வளங்கள் பின்வரும் பண்புகளைக் கொண்டது.

- விநியோகத்தில் வரையறுக்கப்படாமை
- சந்தர்ப்பச் செலவு இணைக்கப்படாமை.
- பொருளாதாரமற்ற வளங்களுக்கு சந்தையோ அல்லது விலையோ இல்லை.
- தனிப்பட்டவர்களின் உரிமை.

**(3 புள்ளிகள்)**

b) கேள்வியின் விலை நெகிழ்ச்சி = $\frac{\text{கேள்வித் தொகை மாற்று வீதம்}}{\text{விலை மாற்ற வீதம்}}$

$$PED = \frac{\%\Delta Qd}{\%\Delta p}$$

$$PED = \frac{\Delta Qd}{\Delta p} \times \frac{P}{Qd}$$

$$= 5/1 \times 10/20$$ அல்லது

$$= \frac{25\%}{10\%}$$

$$= \underline{\mathbf{2.5}}$$

**(3 புள்ளிகள்)**

c)

| | **நிறை போட்டி** | **தனியுரிமை** |
|---|---|---|
| 1 | சந்தையில் மிக அதிக எண்ணிக்கையான விற்பனையாளர்கள் உள்ளனர். | ஒரு தனி விற்பனையாளர் மட்டும் சந்தையில் உள்ளார். |
| 2 | பொருட்கள் ஒத்த தன்மையுடையவை. | பொருட்கள் தனித்தன்மையானவை |
| 3 | உட்பிரவேசிக்க வெளியேற தடைகள் இல்லை. | உட்பிரவேசிக்க வெளியேற தடைகள் உண்டு. |
| 4 | நீண்ட கால நகர்வில் சாதாரண இலாபத்தை உருவாக்கும் | நீண்ட கால மற்றும் குறுகிய கால நகர்வில் பொருளாதார இலாபத்தை ஈட்ட முடியும். |
| 5 | விலை ஏற்பவர் ஒரு சந்தை விலை | விலை உருவாக்குபவர். விலை தீர்மானிக்கப்படுவதால் விலையில் பாரபட்சம் காணப்படும். |
| 6 | கேள்வி வளைவானது நிறைவான கேள்வி நெகிழ்ச்சி வளைவாகும். | கேள்வி வளைவானது கீழ் நோக்கி வளையும் |

**(04 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 3ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

i. கூற்று சரியானது (கூற்றுடன் இணங்குகின்றேன்)

**(01 புள்ளிகள்)**

ii. உற்பத்திக்கான காரணிகளின் கேள்வியானது உற்பத்தி செய்யப்படுகின்ற பொருளுடன் அதற்குத் தேவையான காரணிகளுக்கான கேள்வியில் தங்கியுள்ளது. இது பொருளை உற்பத்தி செய்பவர்களில் தங்கியுள்ளது. உற்பத்திக் காரணிகள் அவற்றிற்கு பொறுப்பானவர்களின் உரிமத்தில் தங்கியுள்ளது மற்றும் அவர்கள் விநியோகத்திற்கான விலையை தீர்மானிக்கிறார்கள் ஆகவே விலையானது கேள்வி மற்றும் உற்பத்திக்கான காரணிகளின் வழங்களினால் தீர்மானிக்கப்படுகிறது.

**(03 புள்ளிகள்)**

(b)

1. **அதிகரித்து செல்லும் அளவுத்திட்ட விளைவு -** எல்லா காரணிகளும் அதிகரிக்கும் வீதத்தினை விட வெளியீடு பெரிதாக அதிகரிக்கும் ஊழியம் மற்றும் மூலதனம் 100% ஆல் அதிகரிக்கும் போது வெளியீடானது 100% க்கு மேல் அதிகரிக்கும்.

2. **குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு -** உள்ளீடு அதிகரிக்கும் வீதத்தை விட வெளியீடானது சிறியளவில் அதகரித்து காணப்படுமாயின் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு ஆகும்.

3. **மாறா அளவுத்திட்ட விளைவு -** மாறா அளவுத்திட்ட விளைவு எனபது எல்லா உற்பத்தி காரணிகள் அதிகரிக்கும் வீதத்திற்கு சமமாக வெளியீடு அதிகரிக்கும். இவ்வாறாகவே எல்லா உள்ளீடுகளும் குறைவடையும் வீதத்திற்கு சமமாக வெளியீடு குறைவடையும்.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 4ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

i.
1. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2. கைக்கு அடக்கமானது
3. நிலைத்து நிறகும்தன்மை
4. வகுபடுதன்மை
5. ஓரினத்தன்மை
6. ஸ்திரத்தன்மை
7. அங்கீகரிக்கப்பட்டது
8. நெகிழ்தன்மை
9. நியமமானது
10. இணக்கமானது.

**(04 புள்ளிகள்)**

ii. பணத்தின் வடிவில் நிதிசார் சொத்துக்களை வைத்திருப்பதற்கான விருப்பம்தான் பணத்திற்கான கேள்வியாகும். வருமான மட்டம், வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்கம் என்பனவற்றுடன் எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமில்லாத தன்மையும் உட்பட பல காரணிகளால் பணத்திற்கான கேள்வி பாதிப்படைகிறது. பணத்தின் கேள்விக்கான மூன்று நோக்கங்களின்படி பணத்தின் கேள்வியைப் பாதிக்கும் இந்தக் காரணிகளின் பொதுவாக விளக்கப்படுகிறது. இவை கொடுக்கல் வாங்கல்கள் நோக்கம், பாதுகாப்பு நோக்கம் மற்றும் உத்தேச நோக்கம்.

**(03 புள்ளிகள்)**

(b) **மத்தியவங்கியின் தொழிற்பாடுகளை கீழ் வருமாறு வகைப்படுத்தலாம்**

**அடிப்படை தொழிற்பாடுகள்**

- பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு
- நிதியியல் முறை உறுதிப்பாடு

**அடிப்படை தொழிற்பாடுகளின் துணையான தொழிற்பாடுகள்**

- நாணய வழங்கலும் முகாமைத்துவமும்

**முகவர் தொழிற்பாடுகள்**

- ஊழியர் சேமலாப நிதி முகாமைத்துவம்
- வெளிநாட்டு செலாவணி முகாமைத்துவம்
- பொது படுகடன் முகாமைத்துவம்
- பிராந்திய அபிவருத்தி

மற்றைய வணிக வங்கிகளுடனான உறவுமுறை மற்றும் வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்தல்.


- வணிக வங்கிகளுடனான உறவுகள்.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 5ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) **அதிகூடிய விலையினை கீழ்வருமாறு விளக்கலாம்**




உயர்ந்த விலை கொள்கையின் பொருளாதார விளைவுகள்

- கேள்வியின் அளவு கூடுதல் மற்றும் விநியோகத்தின் அளவு குறைதல். ஆகவே சந்தையில் மிதமிஞ்சிய கேள்வி உருவாக்கப்படுகிறது.
- கறுப்புச் சந்தைகள் மற்றும் கறுப்புச் சந்தை விலை ஆனது சந்தையில் பொருட்களின் அளவில் தட்டுப்பாடு ஏற்படுவதால் உருவாகிறது.
- பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படல் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்ய நீண்ட வரிசையில் நிற்க வேண்டியநிலை.
- மிதமிஞ்சிய கேள்வியை இறக்குமதி செய்தல்.
- நிறுவனங்களை அவற்றில் விநியோகங்களை வழங்க உற்சாகப்படுத்தல்.
- சந்தைக்கு குறைந்த தரம் வாய்ந்த பொருட்களை அறிமுகம் செய்தல்.
- பாதகமான விளைவை கடந்து செல்ல அரசாங்கம் அத்தியாவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

**(06 புள்ளிகள்)**

(b) பாதுகாப்புவாதத்தின் அனுகூலங்கள்

- வெளிநாட்டு மேலதிக போட்டிகளிலிருந்து உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாத்தல்.
- போட்டிகளை முகம் கொடுப்பதற்கு முன்னதாக நாட்டினுடைய புதிய வணிகத்தினை (குழந்தைப் பருவ கைத்தொழில்கள்) அபிவிருத்தி செய்ய உதவுதல்.
- பொருளாதாரத்தினுடைய தொழில்வாய்ப்பினை பாதுகாக்க உதவுகிறது.
- பொருளாதாரத்திற்குள் மலிவான பல இறக்குமதிகளை குவிப்பதற்கான வெளிநாடுகளின் வாய்ப்புக்களை தடுத்தல்.
- தீங்கு விளைவிக்கும் பொருட்களின் இறக்குமதியை தடுத்தல்.
- சென்மதி நிலுவையில் நிலையினை முன்னேற்ற இறக்குமதிகளை குறைத்தல்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

**பகுதி - C**

**கட்டாய வினா.**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

## வினா 6ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

A.

(a) பொருளாதார முறைமையின் 3 பிரதான வகைகள்

- முதலாளித்துவ (சந்தைப்) பொருளாதார முறைமை
- சோலிச (திட்டமிடப்பட்ட / கட்டுப்படுத்தப்பட்ட) பொருளாதார முறைமை
- கலப்புப் பொருளாதார முறைமை

(b) 1. **முதலாளித்துவ (சந்தைப்) பொருளாதார முறைமை**

இங்கு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு விலைப் பொறிமுறை மூலம் தீர்வு காணப்படும். இலாப நோக்கமே சந்தைப் பொருளாதாரங்களில் தூண்டும் காரணியாகக் காணப்படும்.

**எது மற்றும் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும்.**

சந்தைப் பொருளாதாரத்தில் பொருட்களின் ஒப்பீட்டு விலைகள் மற்றும் அதனுடைய இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இது தீர்க்கப்படும். பொருட்கள் மற்றும் விலைகளுக்கு இடையில் ஒப்பீட்டுப் பார்க்கப்படும். உற்பத்தியாளர் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக அதிக வளங்களை ஒதுக்கீடு செய்வார். ஆகவே அதிக விலை ஏற்படுத்தும் மற்றும் அதிக இலாபத்தை உறுதிப்படுத்தும்.

**எப்படி உற்பத்தி செய்வது.**

காரணி விலையை அடிப்படையாகக் கொண்டு அதிக இலாபம் தரக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகள் குறைந்த விலையில் உற்பத்தி செய்யப்படும்.

**யாருக்கு உற்பத்தி செய்ய வேண்டும்.**

யாருக்கு இந்த விலைக்கு பொருட்களை வாங்க முடியுமோ? அவர்களின் முடியும். இது கொள்வனவு சக்தியில் தங்கியுள்ளது.

2. **சோலிச (திட்டமிடப்பட்ட / கட்டுப்படுத்தப்பட்ட) பொருளாதார முறைமை**

**எது மற்றும் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும்.**

மத்திய திட்டமிடல் அதிகாரத்தின் மூலம் தீர்மானிக்கப்படும். உற்பத்தி தீர்மானிக்கப்பட்ட பின்னர் எவ்வளவு மற்றும் என்ன அளவு என்பன தீர்மானிக்கப்படும். சமூகத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் தேவைக்கேற்றவாறு உற்பத்தி செய்யபடும். விலைக்கு அதிக கவனம் செலுத்துவதில்லை சமூகத்தில் அதிமுக்கியம் வாய்ந்த அத்தியாவசிய பொருட்களை உற்பத்தி செய்ய வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**எப்படி உற்பத்தி செய்வது.**

மையப்படுத்தப்பட்ட அதிகாரம் திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்தும் உற்பத்தி நிறுவனங்கள் அரசாங்க நிறுவனங்களாகும் மையப்படுத்தப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும். கட்டளைகளுக்கு அமைவாக நுட்பங்கள் தீர்மானிக்கப்படும்.

**யாருக்கு உற்பத்தி செய்ய வேண்டும்.**

இவை மத்திய திட்டமிடல் சபையின் தீர்மானத்தால் தீர்த்து வைக்கப்படும். அவை சமூகம் மற்றும் பொதுநலத்தை மேம்படுத்தும் நோக்கங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்கள். பொருளாதாரக் காரணி விலைகள் சந்தையின் வலுவிற்கு ஊக்குவிப்பாகும். மற்றும் அதிகார பரவலாக்கம் விலைகள் பற்றிய தீர்மானத்தை மேற்கொள்ளும்.

3. **கலப்புப் பொருளாதார முறைமை**

கலப்புப் பொருளாதாரமானது சந்தைப் பொருளாதாரத்தினதும், கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தினதும் இயல்புகளின் ஒரு இணைப்பாகும். விலைப்பொறிமுறை மற்றும் திட்டமிடல் முறைமைகள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன.

**எது மற்றும் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும்.**

தனியார் நிறுவனங்கள் அதிக விலையுள்ள பொருட்களை உற்பத்தி செய்ய முற்படுவதோடு அதிக இலாபத்தை ஈட்டுகின்றது. அரசாங்கம் சமூக பொதுநலத்தை அதிகரிக்கும் வகையில் பொருளை உற்பத்தி செய்கிறது. அரசாங்கம் விலையில் செல்வாக்குச் செலுத்துகிறது. அதாவது வரிகள், மானியங்கள் மூலம் விலைப் பொறிமுறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்துகிறது.

**எப்படி உற்பத்தி செய்வது.**

தனியார் துறையானது அதிக இலாபம் மற்றும் குறைந்த விலை வழிகளை உற்பத்திக்காக பயன்படுத்துகிறது. அரசாங்கத்தின் உற்பத்தி நுட்பங்களுக்கான தெரிவு சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டது.

**யாருக்கு உற்பத்தி செய்ய வேண்டும்.**

கலப்புப் பொருளாதாரம் மக்களின் கொள்வனவு செய்யும் சக்தியை கொண்டு இவ்பிரச்சினை தீர்மானிக்கப்படும் மற்றும் இது அரசாங்கத்தால் செல்வாக்கு செலுத்தப்படும். மக்களின் கொள்வனவு செய்யும் சக்தி மனித மற்றும் மூலதன வளங்களின் உரிமத்தில் தங்கியுள்ளது. அரசாங்கத்தின் தலையீடு இதனை மாற்றும்.

உதாரணம் : வருமானம் மற்றும் சொத்திற்கு அதிகரித்த வரிகளை விதிப்பது, குறைந்த வருமானம் பெறுவோருக்கு மானியங்கள் வழங்குவது, சமூக பாதுகாப்பு திட்டங்களை அறிமுகம் செய்தல் என்பனவாகும்.

**(06 புள்ளிகள்)**

SRI LANKA

B

(a)

| | ரூ. (மில்லியன்கள்) |
|---|---|
| விவசாயம், கால்நடை, காடு வளர்ப்பு | 250 |
| மீன்பிடி | 120 |
| சுரங்கத்தொழில் மற்றும் கல் உடைத்தல் | 75 |
| உற்பத்தி | 100 |
| மின்சாரம், எரிவாயு, நீர் | 200 |
| நிர்மாணம் | 80 |
| மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் | 150 |
| ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் | 100 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 160 |
| வங்கியியல் காப்புறுதி, வீடு மனை வாங்கி விற்றல் | 135 |
| வசிப்பிட உரிமை | 200 |
| அரசாங்க சேவைகள் | 160 |
| தனியார் சேவைகள் | 250 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி காரணிக் கிரய விலை 2016ற்கானது | 1980 |

**(05 புள்ளிகள்)**

| | ரூ. (மில்லியன்கள்) |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி காரணிக் கிரய விலை | 1,980 |
| கூட்டுக : நேரில் வரிகள் | 150 |
| கழிக்க : கொடைகள் | (100) |
| சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2016ற்கானது | 2,030 |

**(03 புள்ளிகள்)**

**உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2016ற்கானது**

| | | ரூ. (மில்லியன்கள்) |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி 2016ற்கானது | = | 2030 |
| 2016 ற்கான விலை சுட்டி | = | 125 |
| உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2016ற்கானது | = | 2030 / 125 * 100 |
| | = | 1,624 |

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**பிரிவு *C* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*